12.06.2023.

OS.No. 118/2021

PW1 மோகன் சற்குணம்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 12.06.2023.

குறுக்கு விசாரணை : ( பிரதிவாதி தரப்பில்)

1 வா.சா.ஆ.1ன்படி உங்களது தகப்பனார் சர்வே எண்.204/2 சொத்தோடு சேர்த்து வேறு சில சொத்துக்களும் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். சர்வே எண்.204/2 சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 1 ஏக்கர் 90 சென்ட். மேற்படி சர்வே எண்ணில் வா.சா.ஆ.1ன்படி உங்களது தகப்பனார் 63 சென்ட் இடத்தை மட்டுமே கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. 63 ¼ சென்ட் கிரையம் வாங்கியுள்ளார்.

2. ஆனால் வா.சா.ஆ.1ல் 63 சென்ட் மட்டுமே கிரையம் வாங்கியிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ 1ன்படி 63 சென்ட் இடத்தை மட்டும் கிரையம் வாங்கிவிட்டு 63 ¼ சென்ட்ற்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. உங்கள் தகப்பனார் கிரையம் வாங்கிய சொத்திற்கு மேற்கு பக்கம் 1ம் பிரதிவாதி இன்பராஜ்க்கு பாத்தியப்பட்ட இடம் உள்ளது என்றால் சரிதான்.

3. 1ம் பிரதிவாதிக்கு மேற்படி சர்வே எண்ணில் 63 சென்ட் பாத்தியம் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. உங்களது தகப்பனார் கிரையம் வாங்கிய காலத்தில் சர்வே எண்.204 ல் கிணறு எதுவும் கிடையாது என்றால் சரிதான். உங்களது தகப்பனாரும், 1ம் பிரதிவாதியும் உடன்பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். ஆனால் தனராஜ் என்ற மற்றொரு சகோதரரும் உண்டு.

4. உங்களது தகப்பனாரும், 1ம் பிரதிவாதியும் கிரையம் பெற்ற பிறகு கிணறு தோண்டுவதற்காக நீரோட்டம் பார்த்தார்கள் என்றால் எனது தகப்பனார், 1ம் பிரதிவாதி மற்றும் தனராஜ் 3 பேரும் சேர்ந்து பார்த்தார்கள். சர்வே எண்.204/2 சொத்திற்கு தெற்கு பக்கம் சர்வே எண்.219 உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.219 ன் மொத்த விஸ்தீரணம் 1 2 ஏக்கர் 10 சென்ட் என்றால் சரிதான்.

5. சர்வே எண்.219 ல் மேலோரம் 6 ஏக்கர் 5 செண்ட் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி 6 ஏக்கர் 5 செண்ட் இடத்திற்கு கிழக்கு பக்கம் 3 ஏக்கர் 3 செண்ட் உங்களது தகப்பனாருக்கும், அதற்கு அடுத்து கிழக்கு பக்கம் 3 ஏக்கர் 3 செண்ட் மேற்படி தனராஜ்க்கும் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.

6. கிணறு வெட்டுவதற்காக நீரோட்டம் பார்க்கும்போது சர்வே எண்.219 ல் உங்களது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட 3 ஏக்கர் 3 செண்டில் தெற்கு ஓரத்தில் நீரோட்டம் இருப்பதாக கண்டறியப்பட்டது என்றால் சரியல்ல. அவ்வாறு நீரோட்டம் இருந்ததால் 1ம் பிரதிவாதி கிணறு வெட்டினார் என்றாலும், கிணறானது உங்களது தகப்பனார் பாக இடத்தில் இருந்ததால் மேற்படி கிணறில் உங்களது தகப்பனாருக்கு 1 பங்கும், 1ம் பிரதிவாதிக்கும் 2 பங்கும் உள்ளது என பேசி முடிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

7. மேற்படி கிணறானது 1ம் பிரதிவாதி செலவில் வெட்டப்பட்டது என்றால் சரியல்ல. இந்த கிணறானது சர்வே எண்.204 ல் உள்ளது. நீங்கள் சொல்வது போல் கிணறானது சர்வே எண்.204 ல் இல்லை என்றாலும், அது சர்வே எண்.219 ல் உள்ளது என்றாலும் இந்த சங்கதியை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றாலும் சரியல்ல.

8. எதிர்வழக்குரையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள மாதிரி வரைபடத்தை பற்றிய விபரத்தை உங்களது வழக்கறிஞர் மூலம் தெரிந்து கொண்டீர்களா என்றால் அதுபோன்ற படத்தை நான் பார்க்கவில்லை. உங்களது வழக்கறிஞராவது சொன்னாரா என்றால் என்னிடம் காட்டப்படும் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளபடி சொத்து கிடையாது. சர்வே எண்.219 எந்தவித உட்பிரிவும் செய்யப்படாமல் உள்ளது என்றால் சரியல்ல.

9. எத்தனை உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சர்வே எண்.219/1 மற்றும் 219/2 என பிரிக்கப்பட்டுள்ளது. சர்வே எண்.219 ஆனது 2 உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்பதைக் காண்பிக்க எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

10. சர்வே எண்.218/1 மற்றும் 218/2 சொத்தை பொறுத்து எவ்வித விளக்கமும் கொடுக்காமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. சர்வே எண்.218/1

மற்றும் 218/2 ன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் சர்வே எண்.218/1 ன் விஸ்தீரணம் 1 ஏக்கர் 57 சென்ட். சர்வே எண்.218/2 ன் மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 73 சென்ட். வா.சா.ஆ.1 ன்படி சர்வே எண்.218 ல் 3 ஏக்கர் 30 சென்டில் நடுபகுதியில் 1 ஏக்கர் 10 சென்ட் இடத்தை கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான்.

11. ஆனால் இந்த வழக்கானது 1 ஏக்கர் 57 சென்டிற்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.274/1 ல் எனது தகப்பனார், 1 ம் பிரதிவாதி இன்பராஜ்க்கு 18 சென்டும், சர்வே எண்.274/10 ல் 10 சென்டும், சர்வே எண்.341/16 ல் உள்ள கிணறையும் சேர்த்து ஈடுகொடுத்துள்ளார். இந்த விபரம் எதையும் உங்களது வழக்குரையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

12. வா.சா.ஆ.1 ன்படி சர்வே எண்.218 ல் 1 ஏக்கர் 10 சென்ட் இடத்தை கிரையம் வாங்கிவிட்டு 1 ஏக்கர் 57 சென்டிற்கு மோசடியாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி மற்றொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)**

ஒம்/- கே.பாஸ்கர்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, (FAC)
தென்காசி.